DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 48/2015
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW
Defence

Name : Sangeetha

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 08th July 2025..

5ம் எதிரி ஆஜா். 1 முதல் 4 எதிரிகளுக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

முதண்மை விசாரணை

நான் தற்போது வேலூா் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் 01.10.2014அன்று இரவு 9.30 மணியளவில் திண்டிவனம் அரசு ம்ருத்துவமனயையில் பணியில் இருந்தபோது பேராவூா் கிராமத்தைச் சோ்ந்த மாரிமுத்து 57 வயது என்ற நபா் என்னிடம் சிகிச்சகைக்கு மஞ்சளா என்பவா் அழைத்து வந்தாா். அவா் தன்னை அடையாளம் தெரிந்த 5 நபா்களால் 01.10.2014 அன்று இரவு 6.00

மணியளவில் அவர் அவரது வீட்டின் அருகாமையில இரும்பு பைப் மற்றும தடியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் காண்ப்பட்டது.

1) இடது பக்க கண்ணத்தில் கண்றிய காயம் 3 ஒ 3 செமீ அளவில் காணப்பட்டது இடது பக்க கண்ணத்தில் சிராய்ப்பு காயம் 2 ஒ 1 செமீ அளவில் காணப்பட்டது. வலது பக்க பின் முதுகில் வீக்கம் 3 ஒ 3 செமீ அளவில் காணப்பட்டது. இடது பக்க பின் முதுகில் 2 ஒ 2 செமீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. இடது பக்க மேல்கையில் கன்றிய காயம் 3 ஒ 3 செமீ அளவில் காணப்பட்டது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்து அவர் தன்னிச்சயைாக மருத்துவமனையை விட்டு சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பற்றி கூற இயலவில்லை. அவரை மருத்துவமனையில் அனுமதித்தற்கான சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பேராவூர் உலகாபுரம் கிராமத்தைச் சேர்ந்த மஞ்சளா 35 வயது என்ற நபர் என்னிடம் சிகிச்சகைக்கு மாரிமுத்து என்பவர் அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 5 நபர்களால் 01.10.2014 அன்று மாலை 6.00 மணியளவில் அவர் அவரது வீட்டின் அருகாமையில் கையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் காண்ப்பட்டது. அவரை பரிசோதித்த போது வெளி காயங்கள் எதுவும் இல்லை. வயிற்றின் வலி கை கால்களில வலி இடது பக்க கண்ணத்தில் வலி இருந்தது. அவரை புறநோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழஙகினேன். காய்சசான்று அ.சா.ஆ- 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சமமில்லாத பகுதியில் ஒருவர் தானாக விழுந்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. குச்சி என்பதும் தடி என்பதும் வெவ்வேறானவை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் குச்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

விபத்து பதிவேட்டில் மாரிமுத்து என்பவருக்கு முகம் மற்றும் தலையில் காயங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தலையில் காயம் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை. கண்ணத்தில் காயம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கயாம்பட்ட மஞ்சுளா காலால் எட்டி உதைக்கப்பட்டதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடபட்டுள்ளது என்றால் இல்லை. மஞ்சுளா வலி இருப்பதாக மட்டும் குறிப்பிட்டுள்ளார். வலி என்பது ஒருவர் உடல் உபாதையால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

ஒம்/- (XXXX)
நீதித்துறை நடுவர்,
கூானுார்.

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.48/2015

Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 9 (LW10)

Defence

Name : Natrajan

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 08th July 2025.

மற்றும் ஆம் எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 4 எதிரிகளுக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

முதண்மை விசாரணை

நான் தற்போது மாநில இணையவழி குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு கிளியனூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வளாராக பணிபுரிந்தபோது 03.10.2014 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் சிவக்குமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது 02.10.2014 அன்று 20.00 மணிக்கு திண்டிவனம் அரசு

மருததுவமனயில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சிகிச்சையிலிருந்த பேராவூரைச் சேர்ந்த மாரிமுத்து என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து

.

கிளியனூர் காவல்நிலைய குற்ற எண்.503/2014 அதன் பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 323, 324, 356, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு நான் இந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ' அன்றே 03.10.2014 அன்று 7.05 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் துளசி மற்றும் முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அது முறையே அ.சா.ஆ. 7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு சாட்சிகள் மாரிமுத்து மஞ்சளா லலிதா துளசி மற்றும முத்துக்கிருஷ்ணன் வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே காலை 11 மணிக்கு எறையானூர் பேருந்து நிறுத்தத்தில ' வைத்து எதிரி அண்ணாமலையை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அ்னுப்பி வைத்தேன். மற்ற 4 எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்று விட்டதால கைது செய்யவில்லை. 04.10.2014 அன்று சாட்சிகள் ஆறுமுகம் அண்ணாமலை ஆகியோர்களை தனித்தினியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 16.12.2014 அன்று இவ்வழக்கில் காயம்பட்ட மாரிமுத்து மற்றும் மஞ்சளா ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த திண்டிவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் சங்கீதா என்பவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். ' அதன் பிறகு முதல் தகவல அறிக்கையை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதவு செய்தேன். எனது விசாரணையை முடித்து 16.12.2014 அன்று எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 323, 324, 356, 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லபப்டும் நாள் 01.10.2014 18.00 மணி என்றால் சரிதான். காவல நிலையத்திற்கு 2.10.2014 20.00 மணியளவில தகவல ' கிடைக்கப்பெற்றது

என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 8ம் காலத்தில் வாதியால் தாமதம் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் என்ன தாமதம்  என்று விளக்கி கூறப்பட்டுள்ளதா என்றால் முதல் தகவல் அறிக்கையை சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்துள்ளார் அதனால் அ்துபற்றி நேரடியாக எனக்கு தெரியாது.

காவல் நிலையத்திறகும் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கும் சுமார் 15 கிமீ துாரம் இருக்கும். காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல சுமார் அரைமணிநேரம் ஆகும்.

சிறப்பப உதவி ஆய்வாளர் புகார் வாக்குமூலத்தை 20.00 மணிக்கு பெற்றுள்ளார் என்றால் புகாரில் மணி குறிப்பிடப்படவில்லை ஆனால் முதல் தகவல அறிக்கையில் 20.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிகார் வாக்குமூலததில் இன்று 02.10.2014 20.00 மணிக்கு திண்டிவனமம் அரசு மருத்துவமனையில் மேற்படி புகார் வாக்கும்லம் பெற்று வந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதா தவிர புகார் வாக்குமலம் பதிவு செய்யப்ட்ட நேரம் குறிப்பிடப்படவில்லை.

சிறப்பு உதவி ஆய்வாளரை நான் விசாரித்தபோது எத்தனை மணிக்கு புகர் வாக்மூலம் பதிவு செயதார் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால இல்லை. இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்கள் நான எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் கடைக்கால் எடுக்கும்போது பிரச்சனை ஏற்பட்டது என்று வழக்கு பதிவு செய்துள்ளேன். 1ம் எதிரி அசா.1க்கு சொந்தமான இடத்தில் கடைக்கால் எடுப்பதாக ஊர் பஞசாயத்தில் சொன்னார் என்றாலும் அந்த பஞ்சாயத்தில் காலையில் பேசிக்கொள்ளலாம் என்று 1ம் எதரியிடம் சென்று சொல்லுமாறு ஊர்க்காரர்கள் சொன்னார்கள் என்றாலும் அதன்படி அசா.1 1ம் எதிரியிடம் சென்று சொன்னார் என்றாலும் அப்போதுதான் சம்பவம் நடந்ததாக அசா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அசா.1ன் வீட்டின் எதிரில் நடந்தது. அசா்1 தனது வாக்குமூலத்தல் தலை மற்றும் முகத்தில் அடிப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.  நான் மருத்துவரை விசாரித்து காய்ச்சான்றுகள் பெற்றேன் என்றால் சரிதான்.

விபத்து பதிவேட்டில் மேற்சொன்ன காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்தம் 5 காயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது.

அசா.2க்கு ஒரு காயம் ஏற்பட்டதாக தனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் சரிதான். அ.சா.2 விபத்து பதிவேட்டில் மொத்தம் 3 காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும மருத்துவ பதிவேட்டில் எதிரிகள் அசா2 யை காலால் எட்டி உதைத்தாக குறிப்பிடப்படடுள்ளதா என்றால் இல்லை.

இறுதி அறிக்கையில் அனைத்து எதரிகள் மீதும் 354 இதச குற்றச்சாட்டு குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதற்குண்டான உட்கூறுகள் குறித்து இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 1ம் எதிரியிடம் நாட்டாமையிடம் இட பிரச்சனை தொடர்பாக சொல்லியிருக்கிறேன் என்றும் அவர் காலையில் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னபோது 1ம் எதிரி அசா1 பார்த்து அசிங்கமாக பேசிவிட்டு மறற எதரிகள் அனைவரும் சேர்ந்து சாட்சி 2 ஐ அவர் வீட்டை விட்டு வெளியே தள்ளி அசிங்கமாக பேசியதால் இதச 354 பதிவு செய்யப்பட்டது.

இதச 354 எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையதக்கதல்ல என்றால் சரியல்ல. இறுதி அறிக்கையில் 4ம் எதிரி பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொலலியுள்ளேன். எதிரிகளுக்கும் அசா1க்கும் முன்விரோதம˙ இருந்ததா என்றால் இல்லை. 1ம் எதிரி வீட்டின் பின்பக்கத்தில் அசா1க்கு சொந்தமான கழிப்பறை உள்ளது என்றாலும் அந்த கழிப்பறை துர்நாற்றம் வீசுவதாக பலமுறை அவரிடம் சொல்லியும் கேட்காததால் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு அசா.1 எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

அசா.1 க்கு எங்கேயே ஏற்பட்ட காயததை வைத்துக்கொண்டு பொய்யான புகார் ஒன்றை பெற்று தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தததின் அடிப்படையில் சரிவர விசாரிக்காமல் தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிடடு தற்போது தவறாக சாட்சியம˙ அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- (XXXX)
நீதித்துறை நடுவர்,
வானூர்.